[2005 பிப்ரவரி 2

முற்பகல் 10-45

9—

மதிய உணவில் பால்

***39322—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவுடன் பால் வழங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டம் தியாகச் செம்மல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே தொடங்கப்பட்டது. நம்முடைய அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதை விரிவுபடுத்தி (குறுக்கீடு)—முன்னாடியே ஆரம்பிச்சாச்சு, முன்னாடியே காமராஜர் ஆரம்பித்துவிட்டார்—பள்ளிகளிலே இருக்கிற அனைவரும் மதிய உணவு உண்ண வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், மதிய உணவோடு முட்டையும் சேர்த்துக் கொடுத்தார்கள். ஆக, படிப்படியாக மதிய உணவிலே ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. ஏனென்று சொன்னால், மதிய உணவு குழந்தைகளுக்கு மிகத் தேவை என்கிற காரணத்தினாலே, ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இப்போது நம்முடைய அரசு பாலிலே இருக்கிற சத்தினுடைய அளவைக் கருத்திலே கொண்டு, மதிய உணவு சாப்பிடுகிற குழந்தைகளுக்கு, வாரத்திலே ஒரு நாள் அல்லது இரு நாட்களாவது சத்துணவுடன் பால் வழங்குவதற்கு முயற்சி எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையத்திற்குத் தேவையான

2005 பிப்ரவரி 2]

உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் போன்றவை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் நாள் ஒன்றுக்கு பயனாளிக்கு 23 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்த உணவுச் செலவினத்தை இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 35 பைசாவாக உயர்த்தியிருக்கின்றார். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.20.98 கோடி ஆகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், மேற்கண்ட விகிதத்தில் சத்துணவு அளிக்கப்படுவதால், ஒரு நாளைக்கு 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 358.2 கலோரி சக்தியும், 8.62 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது. 5 முதல் 9 வயது வரை உள்ள மாணவர்களுக்கு 435 கலோரி சக்தியும், 10.6 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது. 10 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு 504 கலோரி சக்தியும், 11 கிராம் புரதச் சத்தும் கிடைக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சத்துணவு சாப்பிடக்கூடிய குழந்தைகளுக்கு மேலும் புரதச் சத்து மிகுந்ததாக, ஒரு பயனாளிக்கு வாரத்தில் திங்கட்கிழமை அன்று 20 கிராம் உருளைக்கிழங்கும், செவ்வாய்க்கிழமை அன்று 20 கிராம் முழு கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் முழு பச்சைப் பயறும், வியாழக்கிழமை வேகவைத்த ஒரு முட்டை ஆகியவற்றையும் சமைத்து சத்துணவுடன் சேர்த்து அம்மா அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும், இதனால் ஒரு பயனாளிக்கு சத்துணவுடன் 8.54 கிராம் புரதச் சத்தும், 158.2 கலோரி சக்தியும் கூடுதலாக ஒவ்வொரு வாரமும் கிடைக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

10—

கட்டட வசதி

•31237—திரு. பி. கே. சேகர்பாபு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—